புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஆகஸ்ட் (AUGUST) 13, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 33 • விலை(PRICE) ரூ.6.00

## கழகத் தோழர்கள் களமிறங்கினர்

# பரப்புரைப் பயணம் தொடங்கியது

**‘ஜாதியில் திருமணம்! மதத்தில் பார்ப்பனியம்! வாழ்வில் மூடநம்பிக்கை! என்ற மூன்று கருத்துகளை முன்னிறுத்தி ‘தடை, அதை உடை!’ என்ற முழக்கத்தோடு கழகத் தோழர்களின் பரப்புரைப் பயணம் திருச்சி, நாகர்கோவில், போராவூரணி என்ற மூன்று முனைகளிலிருந்து புறப்பட்டது.**

**போராவூரணியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், நாகர்கோயிலில் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரனும், திருச்சியில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும் பயணத்தை துவக்கி வைத்தனர். போராவூரணியிலும், திருச்சியிலும் பொதுக்கூட்டமாக நடந்தது.**

**கழகப் பொருளாளர் திருப்பூர். துரைசாமி தலைமைக்குழு உறுப்பினர்கள் அய்யனார், சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் போராவூரணி பயணக் குழுவினரோடு இணைந்து பயணம் செய்து வருகின்றனர். அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன் இருவரும் பயணக்குழுவினரின் முன்னேற்பாடுகளை செய்து வருகின்றனர். ஒவ்வொரு நாளும் 4 பரப்புரைக் கூட்டங்களை நடத்துகின்றனர். நூல்விற்பனை, மக்களிடம் உண்டியல் மூலம் நிதி திரட்டுதல், துண்டறிக்கை வழங்கல் என்று தோழர்கள் பணியாற்றுகிறார்கள்.**







### நாகர்கோவில் அணி:

சேலம் அணியின் பயணக் குழு 05.08.2026 புதன் மாலை 6.00 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில் மாலை அணிவித்து கொள்கை முழக்கத்தோடு நாகர்கோவில் நோக்கி புறப்பட்டது. பயணக் குழுத் தோழர்களுக்கு இரவு உணவு சேலம் மாநகரத் தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாகர்கோவில் மீனாட்சிபுரத்தில் 06.08.2026 மாலை 5.00 மணிக்கு மேட்டூர் டி.கே. ஆர். இசைக்குழுவின் பறை முழக்கம் மற்றும் நாட்டுப்புற பாடகர் சித்திரசேனன், கோவிந்தராஜ் ஆகியோரின் பகுத்தறிவு பாடல்களுடன் முதல் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத் தலைவர் ஜா. சூசையப்பா தலைமை வகித்தார். குமரி மாவட்டப் பொருளாளர் ரமேஷ்பாபு முன்னிலை வகித்தார். குமரி மாவட்டச் செயலாளர் நீதியரசர் வரவேற்புரை ஆற்றினார். திமுக குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர் ஆர். மகேஷ் பரப்புரையைத் துவக்கி வைத்தார்.

கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், அமைப்புச் செயலாளர் ஈரோடு ப.இரத்தினசாமி, பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு தமிழரசன், தமிழ் மதி, கோபிசெட்டிப்பாளையம் ரமேஷ், ஆத்தூர் நகரச் செயலாளர் கணபதி, திராவிட தமிழர் கட்சியின் மாநில நிதிச் செயலாளர் சங்கர் ஆகியோர் பரப்புரையின் நோக்கத்தை பொதுமக்களிடத்தில் எடுத்துரைத்தனர். நிறைவாக கொளத்தூர் ராஜா நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. பயணக் குழு தோழர்களுக்கு இரவு உணவு திமுக குமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆர். மகேஷ் ஏற்பாடு செய்தார். பயணக் குழு தோழர்களுக்கு பயனாடை அணிவித்தார்.

**இரண்டாம் நாள்:** மக்கள் பேராதரவுடன் நாகர்கோவில் பகுதியில் 07.08.2026 வெள்ளி காலை 10.00 மணிக்கு தக்கலை பகுதியிலும், மதியம் 12.30 மணிக்கு ஆற்றூர் பகுதியிலும் கூட்டம் நடைபெற்றது. தொடக்க நிகழ்வாக மேட்டூர் டி.கே. ஆர். இசைக்குழுவின் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், நம்பியூர் ஒன்றியச் செயலாளர் ரமேஷ், ஆத்தூர் நகரச் செயலாளர் கணபதி, பெரியார் தொழிலாளர் கழகத்தின் விவசாய அணித் தலைவர் ரவி ஆகியோர் பரப்புரைப் பயணத்தின் நோக்கம் குறித்து கருத்துரையாற்றினர். நிறைவாக மேட்டூர் சீனி நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. பயணக் குழுத் தோழர்களுக்கு உணவு ஏற்பாடுகளை குமரி மாவட்டப் பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**மூன்றாம் நாள்: ஏர்வாடியில் சங்கிகளின் சலசலப்பைத் தகர்த்து பரப்புரை** ஆக-8, சனி காலை 10.00 மணிக்கு குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி பகுதியிலும், மதியம் 12.30 மணிக்கு பணகுடி, மாலை 5.00 மணிக்கு ஏர்வாடி பகுதியில் நடைபெற்றது.

மதத்தில் பார்ப்பனியம் என்ற தலைப்பை ஒட்டிய கழகப் பரப்புரைப் பாடலான “ஜாதியும் மதமும் வேர் விட்டு வளருது சனாதானம் நம்மை ஆளத் துடிக்குது” “நூற்றாண்டு கால திருப்பரங்குன்றம் கலவரவம் தொடங்க பார்க்குது சங்கிகள் கூட்டம்” என்ற பாடல் பாடும்போது அங்கிருந்த ஆர். எஸ்.எஸ்- காரர் வேகமாக மேடைக்கு அருகில் வந்து இந்து முஸ்லீம் ஒற்றுமையாக இருக்கிறோம். நீங்கள் இப்படி பாடக் கூடாது என்றும், அங்கு சுற்றி இருந்தவர்களை வேடிக்கை பார்க்காதீர்கள் இவர்களை விரட்டுங்கள் என்றும் மக்களை நோக்கி அந்த நபர் கலவரத்தை தூண்டும் விதமாக கூச்சலிட்டார். இதற்கு தோழர்கள் உடனடியாக தக்க பதிலடி கொடுத்து, அதன்பிறகு 2 மணி நேரம் நிகழ்ச்சியை நிறைவு செய்தனர். அங்கு கூடியிருந்த மக்கள் கடைசி வரை கலையாமல் கை தட்டி உற்சாகப்படுத்தி பெரும் ஆதரவு அளித்தனர். கூட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்டத் தலைவர் பால்வண்ணன் தலைமை வகித்தார். குமரி மாவட்டச் செயலாளர் நீதி அரசர் முன்னிலை வகித்தார். சுடர் மணி வரவேற்புரை ஆற்றினார். கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், ஆத்தூர் நகரச் செயலாளர் கணபதி, ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்து கருத்துரையாற்றினர். நிறைவாக கொளத்தூர் கணேசன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

பயணக் குழுத் தோழர்களுக்கு காலை உணவு குமரி மாவட்ட நீதியரசர் ஏற்பாடு செய்திருந்தார். மதிய உணவு மற்றும் இரவு உணவு திருநெல்வேலி மாவட்டத் தலைவர் பால்வண்ணன் ஏற்பாடு செய்திருந்தார்.

தோழர்கள் கொளத்தூர் கணேசன், ராஜா தலைமையில் ராமச்சந்திரன், அம்ஜத் கான், கோபிசெட்டிபாளையம் தோழர்கள் துரைசாமி, நடராஜன், மயில்சாமி, கொளத்தூர் குமரேசன், வனவாசி நகர தலைவர் செந்தில் ஆகியோர் கடைவீதி வசூல் மூலம் ரூ.11,137 நிதி திரட்டினர். கழக வெளியீடுகள் ரூ. 2,270 விற்பனையானது. புத்தக விற்பனைப் பணியை தோழர்கள் தங்கதுரை,கோகுல், தேவராஜ் ஆகியோர் மேற்கொண்டனர்.

அனைத்து பரப்புரைக் கூட்டங்களிலும் ஜாதி எதிர்ப்பு, பகுத்தறிவு மூடநம்பிக்கை ஒழிப்பு பாடல்களை மேட்டூர் டி.கே.ஆர் இசைக்குழு கோவிந்தராஜ் மற்றும் நாட்டுப்புற பாடகர் சித்திரசேனன் ஆகியோர் உணர்ச்சியுடன் பாடினர்.

அமைப்புச் செயலாளர் ஈரோடு ப. இரத்தினசாமி, தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், பயண ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், சேலம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், தமிழ்நாடு மாணவர் கழகம் கவியரசு, கொளத்தூர் செந்தமிழ் கலையமுதன், பெரியார் நம்பி, குமரி மாவட்டத் தோழர்கள் சாகுல் ஹமீத், மஞ்சு குமார், ஐசக் ராஜ், திருநெல்வேலி மாவட்டக் கழகத் தோழர்கள் கசமுத்து, தாஸ், முகைதீன், ஜாகிர் உசேன், சுரேஷ், குணசீலன், வெள்ள பாண்டி, நம்பிராஜன், முருகன், திமுக சார்பில் நாகர்கோவில் நகர கிழக்குப் பகுதிச் செயலாளர் துரை, வட்டச் செயலாளர்கள் பாலா, ஜீவா மற்றும் நிர்வாகிகள் சிதம்பரம், ஜோனி, ராஜேஷ் ரத்தினமணி, நாஞ்சில் ராஜ், சத்ய சாய்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பரப்புரைப் பயணத்திலிருந்து சில துளிகள்....

★ திருநெல்வேலி பணகுடி பகுதியில் கழகப் பரப்பரைச் செயலாளர் பால்.பிரபாகரன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஆட்டோ ஓட்டுனர் உற்சாகம் பெற்று மேடைக்கு வந்து தோழர்களுக்கு பயனாடை அணிவித்து பாராட்டினார். தோழர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

★ பணகுடி பகுதியில் பரப்புரையைக் கவனித்துக் கொண்டிருந்த பார்வையாளர் ராஜலட்சுமி பயணக் குழு தோழர்களை பாராட்டி குளிர்பானம் வழங்கினார். அவருக்கு கழக வெளியீடுகளை தோழர்கள் வழங்கினர்.

★அதிராம்பட்டினம் பள்ளிகொண்டான் பகுதியைச் சார்ந்த தோழர்கள் ராஜேஷ், வினோத், மகேஷ் ஆகியோர் கழகப் பொருளாளர் துரைசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆடை போர்த்தி கழக வெளியீடுகளை வழங்கினார்.

★ கோவை ’தோழர்’ அறக்கட்டளை சாந்தகுமார் பேராவூரணி அணி தோழர்களுக்கு முதலுதவி மருந்து பொருட்களை வழங்கினார்.

★ பெயர் சொல்ல விரும்பாத ஒருவர் பேசிய கருத்துக்களை கவனித்து விட்டு ரூ.500 ஒருவரும் மற்றொருவர் ரூ.1000 வழங்கினர்.

★ திருச்சி பெரியார் பெருந்தொண்டர் தமிழ்ச்சுடர் இரண்டு நாட்களும் தனது இல்லத்தில் பயணக்குழு தோழர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தார். அய்யாவுக்கு வயது 85. பயணக்குழு அரியலூர் நோக்கி புறப்படுவதற்கு முன் இவ்வாறு கூறி வழியனுப்பினார். ”யார் யாரோ சொல்லுகிறார்கள் சிங்கப்படை என்று; ஆனால், மக்களுக்காக களத்தில் நிற்கும் இது தான் சிங்கப்படை”.

திருச்சி அணியை தலைமையேற்று நடத்தும் உமாபதிக்கும், குழுவில் இணைந்து பயணிக்கும் பெரியார் பிஞ்சு திராவிட மகிழனை ’இளம்புலவர்’ என்று பாராட்டினார். ஆண் தோழர்களோடு சமமாக இணைந்து பயணிக்கும் இரண்யாவுக்கும் பாராட்டு தெரிவித்து ஆடை போர்த்தினார்.

★சமூநீதிப் பேரவை மாவட்டச் செயலாளர் மேகநாதன் திருச்சி பயணக்குழு தோழர்களுக்கு குளிர்பானங்களை வழங்கி ரூ.500 நன்கொடை அளித்தார்.

★ திருச்சி தொடக்கவிழா பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற வழக்கறிஞர் பானுமதி பயணக் குழுவினரை பாராட்டி ரூ.5000 நன்கொடை வழங்கினார்.

★அரியலூரில் தெருமுனைக் கூட்டம் பொதுக்கூட்டம் போல் மிகச்சிறப்பாக நடந்தது. கழகத் தோழர் பாரி. சிவா சிறப்பான முன்னேற்பாடுகளை செய்திருந்தார். திமுக ஒன்றியச் செயலாளர் எழில்மாறன் 50-க்கும் மேற்பட்ட தோழர்களோடு பங்கேற்றார்.

★ கழகத் தலைமைக்குழு உறுப்பினர் மயிலாடுதுறை இளையராசா அரியலூர் நிகழ்வில் பங்கேற்று ரூ.5000 நன்கொடை வழங்கினார்.

★ திருச்சியில் நடந்த பயணத் தொடக்க விழாவில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பயணக்குழுவில் பங்கேற்ற தோழர்கள் மற்றும் கலைக் குழுவினர் 18 பேருக்கும் தலா ரூ.1,000 அன்புப் பரிசாக வழங்கினார்.

**நமது செய்தியாளர்**

# இரட்டைமலை சீனிவாசன் பிறந்தநாள் கருத்தரங்கம்

தென் மண்டல எல்.அய்.சி பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் கூட்டமைப்பு முன்னெடுத்த சமூக நீதி போராளி இரட்டைமலை சீனிவாசனார் பிறந்த நாள் கருத்தரங்கம் அண்ணாநகர் டவர் கிளப் இக்லு அரங்கில் ஆகஸ்ட்-1 அன்று காலை 10 மணிக்கு நடைபெற்றது.




இரட்டைமலை சீனிவாசன், பெரியார் அம்பேத்கர் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். ச.அய்யனார் (பொதுச்செயலாளர், தெ.ம.எல்.அய்.சி.பி. ஊழியர் கூட்டமைப்பு) தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. வி. சகாயராணி ( தலைவர், எல்.அய்.சி.பி ஊழியர் நலச்சங்கம் செ.கோ-1) வரவேற்புரை ஆற்றினார்.

ச.சுரேஷ்குமார் ( செயலாளர்(சமூக உறவு) தெ.ம.எல்.அய்.சி.எஸ்.சி/எஸ்.டி ஊழியர் நலச்சங்கம்), இரட்டைமலை சீனிவாசன் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட நிகழ்வுகளை விவரித்தார். தமிழ் சாக்ரடீஸ் (திராவிட இயக்க பேச்சாளர்), இரட்டை மலை சீனிவாசன் குறித்த பல்வேறு வரலாற்றுச் செய்திகளையும் ஜாதியை எதிர்த்து களமாடிய நிகழ்வுகள் குறித்து கருத்துரையாற்றினார்.

க.கார்குழலி (தலைவர், தெ.ம.எல்.அய்.சி ஊழியர் கூட்டமைப்பு) பெண்கள் இது போன்ற முற்போக்கு செயல்களில் ஈடுபட வேண்டும் என்றும், ஜாதியப் பாகுபாடுகள் நிறைந்த சமூகத்தில் ஜாதி எதிர்ப்பு போராளிகளின் வரலாறுகளை அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டிய தேவை உள்ளது. இது போன்ற கருத்தரங்கங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று கூறினார்.

நிறைவாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் பேசுகையில் ஜாதியின் நவீன பரிணாமத்தையும், தனக்கு கீழே ஒருவர் இருக்க வேண்டும் என்று கட்டமைத்த பார்ப்பனிய மனநிலையை எடுத்துரைத்தார். ஜாதி ஒழிப்பு பேச வருகிறவர்கள் முதலில் சுயஜாதி எதிர்ப்பாளராக இருக்க வேண்டிய அவசியம் குறித்து சிறப்புரையாற்றினார். கருத்துரையாற்றிய தோழர்களுக்கு பொன்னாடையை அணிவித்தனர். மஞ்சு ( தெ.ம.எல்.அய்.சி.பி. ஊழியர் கூட்டமைப்பு) நன்றி கூறினார்.

## கழகம் புகார் எதிரொலி ஜாதிச் சங்க வாகனங்கள் பறிமுதல்

தீரன் சின்னமலை அவர்கள் நினைவுநாள் என்ற பெயரில் ஜாதிச் சங்கங்கள் நடத்தும் நிகழ்வுகளில் ஆணவப் படுகொலையை ஆதரித்தும், ஜாதிக் கலவரத்தை தூண்டுவதும், போக்குவரத்துக்கு இடையூறாகவும்




வாகனங்களில் அதிக ஒலி எழுப்பியும், விபத்தை ஏற்படுத்தும் வகையில்வாகனங்களை இயக்குவதை தடுத்திடவும் மீறுவோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்கு மண்டல காவல்துறை அய்.ஜி அவர்களிடம் கோவை மாவட்டக் கழகம் சார்பில் ஆகஸ்ட்-1 அன்று மதியம் 12 மணி அளவில் மனு அளிக்கப்பட்டது. மனு கொடுத்ததன் எதிரொலியாக காவல்துறையால் 24 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 220 வாகனங்களை பறிமுதல் செய்துள்ளது.

## ஆதித்தமிழர் பேரவை நிர்வாகி முருகேசன் நினைவேந்தல் நிகழ்வு!

ஜாதி ஒழிப்பு - சமூக நீதி விடுதலைக் களத்தில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஓய்வறியாமல் போராடிய ஒப்பற்ற போராளி, ஆதித்தமிழர் தொழிலாளர் பேரவை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் தோழர் சு. முருகேசன் அவர்களின் மறைவையொட்டி நினைவேந்தல் கூட்டம் மற்றும், படத்திறப்பு நிகழ்வு ஆக-1, வல்லக்குண்டாபுரத்தில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டக் கழகம் சார்பாக மாவட்டத் தலைவர் முகில் ராசு கலந்து கொண்டு புகழ் வணக்கம் செலுத்தி, இரங்கல் உரையாற்றினார். நிகழ்வில் திருப்பூர் குணா பங்கேற்றார்.

## கழக ஏட்டுக்கு நன்கொடை

ஆசிரியர்கள் சிவகாமி, சிவக்குமார் முயற்சியில் ஆதரவாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் ஒருங்கிணைந்து வாட்ஸ்அப் குழு வழியாக புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு மாதம் ரூ. 500 என நன்கொடை திரட்டி வருகின்றனர். ஓராண்டு செயல்திட்டமாக இதைச் செயல்படுத்தி வருகின்றனர். ஜூலை மாத நன்கொடையாக ரூ.9000 வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

- (ஆசிரியர்)

# செயற்கை நுண்ணறிவு தரும் தகவல்களில் பாஜக சார்பு நிலை!

செயற்கை நுண்ணறிவு கருவிகளை சாட்ஜிபிடி, ஜெமினி, மெட்டா தரும் தகவல்கள் குறைபாடுகளையும், சார்பு நிலைகளையும் வெளிப்படுத்துகின்றன என்று 'இந்து ஆங்கில' நாளேட்டில் சுசித்ரா கார்த்திகேயன் என்பவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

இந்த வாரம் ஒரு கட்டுரையை எழுதுவதற்காக, "பிரம்பானன் (Prambanan) கோயிலுக்கு முதலில் சென்ற இந்தியத் தலைவர் யார்?" என்று கூகுள் தேடலில் தட்டச்சு செய்தேன். உடனே, "இந்தோனேசியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரம்பானன் கோயிலுக்கு சென்ற முதல் இந்தியத் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி" என்ற பதில் தோன்றியது.

ஆனால், இந்தியாவும் இந்தோனேசியாவும் 1940-களிலிருந்தே இராணுவம், கலாச்சாரம் உள்ளிட்ட பல துறைகளில் இணைந்து செயல்பட்டு வந்துள்ள நிலையில், அந்தப் பதில் குறித்து எனக்கு சந்தேகம் எழுந்தது. உண்மையை உறுதிப்படுத்துவதற்காக, நூற்றாண்டுக்கும் மேலான செய்தித்தாள் காப்பகங்களைத் தேடக்கூடிய 'தி இந்து' நாளிதழின் பொருள் சார்ந்த (semantic) தேடலைப் பயன்படுத்தினேன். அதில், 1958 டிசம்பர் 14 அன்று, இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், இந்தோனேசியாவிற்கான தனது அரசுமுறைப் பயணத்தின் போது பிரம்பானன் கோயிலுக்குச் சென்றதாக தி இந்து செய்தி வெளியிட்டிருந்தது.

செயற்கை நுண்ணறிவின் வரம்புகளை மேலும் ஆராயும் நோக்கில், ChatGPT மற்றும் Gemini-யிடம் "பாலஸ்தீனுக்கு முதன்முதலாகச் சென்ற இந்திய பிரதமர் யார்?" என்று கேட்டேன். இரண்டும், "2018 பிப்ரவரி 10 அன்று மேற்குக் கரையின் ரமல்லாவுக்கு சென்று பாலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாஸைச் சந்தித்த நரேந்திர மோடியே முதல் இந்திய பிரதமர்" என்று பதிலளித்தன. ஆனால், 'தி இந்து' காப்பகங்களைப் பார்த்தபோது, 1960 மே-19 அன்று ஜவஹர்லால் நேரு காசா பகுதியைப் பார்வையிட்டதே இந்திய பிரதமரின் முதல் பாலஸ்தீனப் பயணம் என்பது தெரியவந்தது.

"அயோத்தி ராமர் கோயிலுக்கு அமெரிக்க செனட்டர்கள் அல்லது காங்கிரஸ் உறுப்பினர்கள் யாராவது சென்றுள்ளனரா?" என்று ChatGPT மற்றும் Gemini-யிடம் கேட்டேன். Gemini, "தற்போதைய அல்லது முன்னாள் அமெரிக்க செனட்டர் அல்லது காங்கிரஸ் உறுப்பினர் யாரும் அந்தக் கோயிலுக்குச் சென்றதாக பொதுப் பதிவோ அதிகாரப்பூர்வ உறுதிப்படுத்தலோ இல்லை" என்றது. ChatGPT, "2024-ல் அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் குழு ராமர் கோயிலுக்குச் சென்றது" என்று தவறான தகவலை அளித்தது. ஆனால், தி இந்து காப்பகங்கள் வேறொரு உண்மையை வெளிப்படுத்துகின்றன.

1993 நவம்பர் 3 அன்று, பாபர் மசூதி இடிக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு ஆண்டு கழித்து, ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட அமெரிக்க செனட்டர்கள் குழு ராமஜன்மபூமி வளாகத்துக்குச் சென்றது. பாரதிய ஜனதா கட்சி (பாஜக) தலைவர்களின் உடனிருப்பில், ஸ்டீவன் மோர்ஸ் தலைமையிலான அந்தக் குழு, ராம் லல்லா சிலை வைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரத்தைப் பார்வையிட்டது.

செயற்கை நுண்ணறிவு வழியாக பெறப்படும் தகவல்களில் முழுமையாக நம்பகத் தன்மை கிடையாது; சார்பு நிலைகள் அதிலும் வரத் தொடங்குகின்றன. கடைசியாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட "வந்தே மாதரம்" மசோதாவில் முழுப்பாடலும் இடம்பெற்றதா? என்று நான் கேட்டேன் (விடுதலை இராசேந்திரன்). முழுப்பாடலும் இடம்பெறவில்லை என்று மெட்டா ஏ.அய் தவறான பதிலை அளித்தது.

## பயணத்திற்கு நூல்கள் வெளியீடு

அகமண முறையை அகற்றுவோம்! ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவோம்! எனும் கேள்வி பதில் வடிவில் ஜாதி எதிர்ப்பு கருத்துக்களை உள்ளடக்கி 16 பக்கத்தில் ரூ.5 விலையில் சிறுநூல் வெளியிடப்பட்டுள்ளது.

பேய், பில்லி, சூனியம், வாஸ்து, தீ மிதித்தல் எனும் தலைப்பில் மூடநம்பிக்கைகளுக்கு அறிவியல் விளக்கத்துடன் செய்திகள் இடம் பெற்றுள்ளன. 24 பக்கம் கொண்ட இந்நூல் ரூ.10 விலையில் வெளியிடப்பட்டுள்ளது.






# ‘இந்துத்துவா’ அரசியலில் பார்ப்பன எதிர்ப்பு!

**‘இந்துத்துவா’ அரசியலிலும் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் முரண்பாடு தீவிரமடைந்து வருகிறது. உ.பி, பீகார் உள்ளிட்ட பாஜக ஆளும் மாநிலங்களில் பார்ப்பன எதிர்ப்பு வெடித்து கிளம்பியுள்ளது.**

இந்தி பேசும் மாநிலங்களில் பாஜகவின் பார்ப்பன வாக்கு வங்கி அமைதியிழந்துள்ளது. இது 2027 சட்டப்பேரவைத் தேர்தலில் அக்கட்சியின் வாய்ப்புகளுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று கூறப்படுகிறது. இந்தி பேசும் மய்யப் பகுதிகளில் பாஜகவுக்கும் அதன் பார்ப்பன ஆதரவாளர்களுக்கும் இடையிலான பிளவுகள் விரிவடைந்து வருகின்றன. இதைப் புறக்கணிப்பது பாஜகவுக்கு ஆபத்தாக முடியலாம். பீகாரின் போஜ்பூர் மாவட்டத்தில் ஜூன்-17 அன்று காவல்துறை என்கவுன்ட்டரில் பாரத் பூஷண் திவாரி என்ற பார்ப்பனர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கொந்தளிப்பு ஜாதிப் பிரச்சினையாக மாறியது. மத்தியப் பிரதேசத்தில் நரோத்தம் மிஸ்ராவ் என்ற பார்ப்பனருக்கு இடைத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாததை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்றன. உத்தரப்பிரதேசத்தில் பார்ப்பன சமூகத்தினர் நடத்திய அரசியல் கூட்டங்களிலும், தங்களுக்கு அநீதி இழைப்பதாக அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

உத்தரப்பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் ஆறு முதல் எட்டு மாதங்களே உள்ள நிலையில் இந்த நிகழ்வுகள் பாஜகவுக்கு கடுமையான சவாலை உருவாக்கியுள்ளன. குறிப்பாக, பல்கலைக்கழக வளாகங்களில் ஜாதிப் பாகுபாட்டைத் தடுக்கவும் தண்டிக்கவும் கடுமையான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்த பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) முடிவு பார்ப்பனர்களை ஆத்திரப்படுத்தியது. பாகுபாடு என்றால் தலித் மாணவர்களுக்கு எதிரானது மட்டுமே என்று மானியக்குழு விதியைத் திருத்தியதை பார்ப்பனர்கள் ஏற்கவில்லை. தங்களுக்கு எதிராகவும் பாகுபாடு காட்டப்படுகிறது என்று கொந்தளிக்கிறார்கள். பாஜகவினரே இதை எதிர்த்து போராடினார்கள்.



**சனவரி-27, ஜோதிஷ் பீட சங்கராச்சாரி கங்கையில் புனித நீராட பல்லக்கில் வந்தார். காவல்துறை தடுத்து நிறுத்திய போது....**

உத்தரப் பிரதேசத்தில் மொத்த வாக்காளர்களில் பார்ப்பனர்கள் 10-12 விழுக்காடு உள்ளனர். மத்தியப் பிரதேசத்தில் அவர்களின் பங்கு 5-6 விழுக்காடாகவும், பீகாரில் 3.65 விழுக்காடாகவும் உள்ளது. பீகாரில் பொதுப்பிரிவினர் பட்டியலில் பார்ப்பனர்களே அதிக எண்ணிக்கையிலான சமூகமாக உள்ளனர்.

“பாறையைப் போல உறுதியாக பாஜகவுக்குப் பின்னால் நின்றவர்கள் நாங்கள்தான். பீகாரில் கட்சியைக் கட்டியெழுப்பியது யார்? தாராகாந்த் ஜா, வினோத் நாராயண் ஜா, கோபால் ஜீ, அஸ்வினி சவுபே, மிதிலேஷ் திவாரி போன்ற பார்ப்பனர்கள்தான். கட்சிக்கு இன்பத்திலும் துன்பத்திலும் துணையாக இருந்தனர். ஆனால் இப்போது எங்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகிறது,” என்று பெயர் வெளியிட விரும்பாத பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்த பாஜக தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

போஜ்பூர் மாவட்டம் பிலௌட்டி கிராமத்தைச் சேர்ந்த பாரத் பூஷண் திவாரி என்ற பார்ப்பனர் ஜூன் 17 காலை காவல்துறை என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டார். (உ.பியில் ஏராளமான பார்ப்பனர்கள் ரவுடிகள் பட்டியலில் உள்ளனர்). அவர் “திவாரி” என்பதாலேயே, அதாவது பார்ப்பனர் என்பதாலேயே கொல்லப்பட்டதாகக் கூறினர். அதே நேரத்தில், மாநிலத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட பாஜகவினரும், மத்திய அமைச்சர் உள்ளிட்ட சிலரும், தலித் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் கொல்லப்படும்போது இதேபோன்ற கோபம் ஏன் வெளிப்படுவதில்லை என்று கேள்வி எழுப்பினர். இந்த ஆண்டு பாஜக பீகாரில் தனது முதல் முதலமைச்சராக சம்ராட் சவுத்ரியை நியமித்தது. அவர் குஷ்வாஹா சமூகத்தைச் சேர்ந்தவர்; அந்தச் சமூகம் பிற்படுத்தப்பட்டோர் (OBC) பிரிவில் அடங்குகிறது.

மே-7, 2026 அன்று, சவுத்ரி முதலமைச்சராகப் பதவியேற்ற ஒரு மாதத்துக்குள், மூத்த பாஜக தலைவரும் முக்கிய பார்ப்பனத் தலைவருமான மிதிலேஷ் திவாரி மாநில கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். முன்னாள் முதலமைச்சர் ஜகந்நாத் மிஸ்ராவின் மகன் நிதிஷ் மிஸ்ரா நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

பாரத் திவாரி கொல்லப்பட்டதற்கான எதிர்வினையாக பார்ப்பன ஆதரவு வாக்கு வங்கியை பாதிக்கும் என்று முன்னாள் முதல்வர் நிதிஷ் குமார் வழக்கத்திற்கு மாறாக கடுமையான கருத்துகளைத் தெரிவித்தார். இதற்கிடையே முதலமைச்சர் சவுத்ரி பேசிய பழைய காணொலிகளும் சமூக ஊடகங்களில் மீண்டும் பரவின. அதில் அவர், “நேற்றும் பிராமணர்களே உயர்ந்தவர்கள்; இன்றும் உயர்ந்தவர்களே. உங்கள் வழிகாட்டுதலின்படியே பீகார் இயங்கும்” என்று கூறியிருந்தார். இது இப்போதும் வைரலாகி வருகிறது.

## மத்தியப் பிரதேசத்தில்

இதற்கிடையில் மத்தியப் பிரதேசத்தில், முன்னாள் அமைச்சர் நரோத்தம் மிஸ்ராவ் என்ற பார்ப்பனருக்கு ஜூலை-30 அன்று நடைபெறவிருந்த ததியா இடைத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜூலை 11 அன்று ததியா மாவட்டத்தில் அவரது ஆயிரக்கணக்கான பார்ப்பன ஆதரவாளர்கள் காவல்துறையுடன் மோதினர். எதிர்ப்பின் அடையாளமாக தேசிய நெடுஞ்சாலை 44-அய் கிட்டத்தட்ட 12 மணி நேரம் மறித்தனர்.

இந்த இடைத்தேர்தலுக்கு பார்ப்பனரல்லாத அஷுதோஷ் திவாரியை பாஜக வேட்பாளராக அறிவித்ததைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் நடந்தது. கட்சியின் மூத்த பார்ப்பனத் தலைவரான மிஸ்ராவின் கோரிக்கையை பாஜக புறக்கணித்தது. கடந்த காலங்களில் தனது கருத்துகளால் பலமுறை சர்ச்சையை ஏற்படுத்தியவர் மிஸ்ரா.

இந்தத் தேர்தலில் திவாரி முதன்முறையாக போட்டியிடுகிறார். ஆனால் பார்ப்பன மிஸ்ரா ததியா தொகுதியின் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர். நான்காவது முறையாக வெற்றி பெற்றிருந்தால், மாநில அமைச்சரவையில் முக்கியமான பதவிக்கு அவர் தீவிர போட்டியாளராக இருந்திருப்பார். பின்னர் மிஸ்ரா புதுடெல்லிக்குச் சென்று கட்சித் தலைவர் நிதின் நபீனை சந்தித்ததாகவும், கட்சியின் முடிவை ஏற்றுக்கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

ஜூலை தொடக்கத்தில், முதலமைச்சர் மோகன் யாதவுக்கும் நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கைலாஷ் விஜய்வர்கியாவுக்கும் இடையே நீடித்து வந்த அதிகாரப் போட்டி புதிய கட்டத்தை எட்டியது. கட்சிக்குள் தற்போது மிக முக்கியமான பார்ப்பனத் தலைவராகக் கருதப்படும் விஜய்வர்கியா, முதலமைச்சருக்கு எழுதிய கடிதம் பொதுவெளியில் வெளியானதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை தீவிரமடைந்தது. தனது கட்டுப்பாட்டில் உள்ள துறைகளில் பணியாற்றும் அதிகாரிகள் தமக்குத் தெரியாமலேயே இடமாற்றம் செய்யப்படுவதாகவும், கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமக்கு ஒத்துழையாமை, புறக்கணிப்பு மற்றும் எதிர்ப்பு மட்டுமே கிடைத்ததாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குற்றம்சாட்டினார்.

## உத்தரப் பிரதேசத்தில்

பாஜக எதிர்கொள்ளும் மிகப்பெரிய பார்ப்பன எதிர்ப்பு தேர்தலை எதிர்கொள்ளவுள்ள உத்தரப் பிரதேசத்தில்தான் உள்ளது. பழைய தாக்கூர்-பார்ப்பனப் போட்டி குறிப்பாக கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் (பூர்வாஞ்சல்) நிலவி வருவதால், இந்தச் சமூகத்தைத் திருப்தியாக வைத்திருப்பது பாஜகவுக்கு மிகவும் சிக்கலான பணியாக உள்ளது.

இந்த ஆண்டு ஜனவரியில், உத்தரப் பிரதேச மாநில அய்.ஏ.எஸ் அதிகாரியான அலங்கார் அக்னிஹோத்ரி, அப்போது பரேலி நகர மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றியவர், பல்கலை மானியக் குழுவின் புதிய விதிமுறைகள் “கருப்புச் சட்டம்” என்று குறிப்பிட்டு அவற்றைத் திரும்பப் பெற வேண்டும் எனக் கோரி, தனது புகைப்படத்துடன் கூடிய சுவரொட்டி ஒன்றை வெளியிட்டு வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவித்தார். இந்த விதிமுறைகள் பொதுப்பிரிவு மாணவர்கள் துன்புறுத்தப்படுவதற்கு வழிவகுக்கும் என்று அவர் அச்சம் தெரிவித்தார்.

அவரது சுவரொட்டியில், இந்த ஆண்டு ஜனவரியில் பிரயாக்ராஜில் நடைபெற்ற மாக் மேளாவில் ஜோதிஷ் பீட சங்கராச்சாரியார் சுவாமி அவிமுக்தேஸ்வரானந்த சரஸ்வதிக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் “அவமதிப்பையும்” கண்டித்திருந்தார். கடந்த சனவரி-27ம் தேதி இந்த சங்கராச்சாரி கங்கையில் ‘புனித நீராட’ பல்லக்கில் பவனி வந்ததை காவல்துறை தடுத்து நிறுத்தியது.

மேலும், உத்தரப் பிரதேச அரசில் “பார்ப்பனர்களுக்கு எதிரான பிரச்சாரம்” நடைபெறுவதாகக் குற்றம்சாட்டி பாஜகவைப் புறக்கணிக்குமாறும் அழைப்பு விடுத்தார். “ஒழுங்கீனம் மற்றும் பணிவிதிகளை மீறுதல்” என்ற அரசு விதிகளின் கீழ் உ.பி ஆட்சி இந்தப் பார்ப்பன அதிகாரி மீது குற்றம் சாட்டியது. உடனே பதவி விலகல் கடிதத்தைத் தந்தனர். அடுத்த சில மணி நேரங்களிலேயே அவரை அரசு இடைநீக்கம் செய்தது.

கடந்த ஆண்டு டிசம்பர் 23 அன்று, அதிருப்தியடைந்த பாஜகவைச் சேர்ந்த பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மேலவை உறுப்பினர்கள் குழு ஒன்று லக்னோவில் மூத்த கட்சித் தலைவர் பஞ்சானந்த் பாதக்கின் இல்லத்தில் கூட்டம் நடத்தியது. இதற்கு சற்று முன்புதான் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பங்கஜ் சவுத்ரி பாஜகவின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். அதுமட்டுமின்றி 6 மாதங்களுக்கு முன்பு பிற்படுத்தப்பட்ட தாக்கூர் சமூகத்தைச் சார்ந்த 40 சட்டமன்ற உறுப்பினர்கள் லக்னோவில் கூடி கட்சித் தலைவராக பிற்படுத்தப்பட்டோரை நியமிக்க வலியுறுத்தினர்.

பார்ப்பன எதிர்ப்பை சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் தனக்கு சாதகமாக பயன்படுத்தினார். பார்ப்பனர்களுக்கு ஆதரவாக பேசி தன்பக்கம் இழுக்க முயன்றார். தனது கட்சி எப்போதும் பார்ப்பன சமூகத்தை மதித்துள்ளதாகவும், பார்ப்பன மாநாடுகளில் பங்கேற்றுள்ளதாகவும் அகிலேஷ் யாதவ் தொடர்ந்து கூறி வருகிறார். பாஜக முண்ணனி தலைவரும் துணை முதலமைச்சருமான பிரஜேஷ் பாதக், மாநிலத்தில் உள்ள செல்வாக்குமிக்க பார்ப்பன சமூக உறுப்பினர்களை சமீபகாலமாகச் சந்தித்து வருகிறார். சமூகத்தின் குறைகளைத் தீர்க்க பாஜக முயன்று வருகிறது.

உத்தரப் பிரதேசத்தில் பார்ப்பனர்கள் வெறும் வாக்காளர்கள் மட்டுமல்ல; அரசியல் கருத்துகளை வடிவமைக்கும் செல்வாக்கு மிக்கவர்களாகவும் உள்ளனர்.லக்னோவைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் எழுத்தாளருமான சரத் பிரதான் கூறுகையில், உத்தரப் பிரதேசத்தில் பார்ப்பனர்களுக்கும் பாஜகவுக்கும் இடையே வெளிப்படையாக அதிகரித்து வரும் அதிருப்திக்கு முக்கிய காரணம், முதலமைச்சர் ஆதித்யநாத் அரசில் தாக்கூர் சமூகத்தின் ஆதிக்கம் அதிகரித்து வருவதே என்றார்.

“சில பார்ப்பன குற்றவாளிகள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள் இந்த அதிருப்தியை மேலும் தீவிரப்படுத்தின. அவர்களில் மிகவும் பிரபலமானவர் விகாஸ் துபே. அவரது கொலை திட்டமிட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட்டது. துபே பார்ப்பன சமூகத்தில் அந்த அளவுக்கு பிரபலமாக இருந்தவர் அல்ல என்றாலும், உத்தரப் பிரதேச காவல்துறை மேற்கொண்ட அந்த என்கவுன்டர் முறையாக நடத்தப்படாத விதம் சமூகத்தில் அவருக்கு ஆதரவு உணர்வை ஏற்படுத்தியது.” என்கிறார் ஆய்வாளர் சரத் பிரதான். உத்தரப்பிரதேச அரசியலில் தாக்கூர்களும் பார்ப்பனர்களும் பாரம்பரியமாக மோதிக்கொண்டிருந்தாலும் இருதரப்பினருக்கும் மோதல் கடுமையாகியுள்ளது என்கிறார்.

***( ‘பிரண்ட்லைன்’ ஆக-15, இதழில் வெளிவந்துள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள்).***

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# சலசலப்புகளை முறியடித்து பயணம் தொடர்கிறது

முதல் பக்க தொடர்ச்சி...




### திருச்சி அணி:

துவக்க பொதுக்கூட்டம் திருச்சி மேலப்புலிவார்டு பகுதியில் ஆக-6 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பயணக்குழு தலைவர் உமாபதியிடம் கழகக் கொடியைத் தந்து பயணத்தைத் துவக்கி வைத்தார்.

டார்வின் தாசன் தலைமை தாங்கினார். பெரியார் விருதாளர் தி.நெடுஞ்செழியன், தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன் ஆகியோர் கருத்துரையாற்றினர். சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மற்றும் லதா சத்யா குழுவினரின் பகுத்தறிவுப் பாடல்களை பாடினர். தலைமைக்குழு உறுப்பினர் திருச்சி மனோகரன் பயணத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். கழகத் தோழர்கள் மணிகண்டன், குணா உள்ளிட்ட தோழர்கள் உடனிருந்து உதவினர்.

**2-ம் நாள்:** திருச்சி புறநகர் அண்ணா நகர் 3வது பேருந்து நிலையம், MIET குண்டூர், சோமரசம்பேட்டை, அல்லித்துறை ஆகிய பகுதிகளில் ஆகஸ்ட்-7, அன்று பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், கருப்பு கோகுல் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

**மூன்றாம்நாள்:** லால்குடி, அரியலூர் பேருந்து நிலையம், ஆர்.எஸ் மாத்தூர் ஆகிய இடங்களில் ஆகஸ்ட்-8 அன்று பிரச்சாரம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. திமுக மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் ஸ்டான்லி, திமுக மாவட்டத் துணை அமைப்பாளர் ஓரம்போ சுரேஷ் ஆகியோர் பரப்புரை பயணம் சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்தனர். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை. தாமோதரன் கருத்துரையாற்றினார். பாரி சிவா கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் துரை. தாமோதரன் நடத்திய "மந்திரமா? தந்திரமா?" நிகழ்ச்சி, திரண்டிருந்த மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது.

திமுக ஒன்றியச் செயலாளர் எழில்மாறன், திருச்சி பயணக்குழு தோழர்களுக்கு ஆடை போர்த்தி வரவேற்றதுடன், உணவு மற்றும் தங்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். எழில்மாறனுக்கு கழகப் பொதுச்செயலாளர் எழுதிய ‘ஆரிய மாடலா?திராவிட மாடலா’ நூல் வழங்கப்பட்டது.

தலைமைக் குழு உறுப்பினர் இளையராஜா, இராவணன், ஆ.வ. வேலு, சுகுமார், ஏசுகுமார், சு. கோபிநாத், த.நா. சூர்யா, இரண்யா, கடலூர் சிவா, மயிலை அருண், அசோக், வீரா, ரஞ்சித் ஆகியோர் கலந்துகொண்டனர். பரப்புரைக் கூட்டத்திற்கு பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டிருந்தனர். எழுச்சியுடன் கூட்டம் நடைபெற்றது.

### பேராவூரணி அணி

ஆக-6, பயண துவக்க பொதுக்கூட்டம் பேராவூரணியில் தலைமைக்குழு உறுப்பினர் திருவேங்கடம் தலைமையில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது. நகரச் செயலாளர் கலைசெல்வன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் கோபி வேலுச்சாமி, முகில்ராசு ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஒரு மணி நேரத்திற்கு மேலாக சிறப்புரையாற்றினார்.

**இரண்டாவது நாள்:** காலை 9 மணிக்கு உடையநாடு கிராமம், மாலை 4 மணிக்கு மல்லிப்பட்டினம், மாலை 6 மணிக்கு அதிராம்பட்டினம் ஆகிய இடங்களில் பரப்புரை நடைபெற்றது. தோழர்கள் திருவேங்கடம், கவிமணி ஆகியோர் தலைமை தாங்கினர். கிருஷ்ணன் அவர்கள் பாடலுடன் தொடங்கியது.

பரிமளராஜன், மதத்தில் பார்ப்பனியம் என்ற தலைப்பில் அய்யனார் (தலைமைக்குழு உறுப்பினர்) ஜாதியில் திருமணம் தலைப்பில் கலைச்செல்வன், நிர்மல்குமார் (தலைமைக்குழு உறுப்பினர்), வாழ்வில் மூடநம்பிக்கை என்ற தலைப்பில் கோபி.வேலுச்சாமி ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக கழகப் பொருளாளர் துரைசாமி சிறப்புரையாற்றினார். தோழர் கவிமணி நன்றி கூறினார்.

வணிகர்களும், பொதுமக்களும் பரப்புரைக்கு ஆதரவு தெரிவித்து மகிழ்ச்சியுடன் நன்கொடை கொடுத்தனர். திமுக பொறுப்பாளர்கள் கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர்கள் பன்னீர்செல்வம் திருவேங்கடம் ஆகியோருக்கு ஆடை அணிவித்தனர். பயணக்குழு தோழர்களுக்கு தேநீர் வழங்கி ஆதரவு தெரிவித்தனர். பேருந்து நிலையத்தின் அருகில் இருந்த திருப்பூர் வியாபாரிகள் சிறுகுறு வியாபாரிகள் பரப்புரைப் பயணத்துக்கு நன்கொடை வழங்கினர்.

பெயர் சொல்ல விரும்பாத ஒருவர் பேசிய கருத்துகளை கவனித்து விட்டு ரூ.500 ஒருவரும் மற்றொருவர் ரூ.1000 வழங்கினர். கழகப் பரப்புரைப் பயணத்தை ஆதரித்த நாம் தமிழர் கட்சியில் முன்பு பணியாற்றிய சைபுதீன் அனைவருக்கும் தேநீர் வாங்கிக் கொடுத்தார். மேலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு எதிராக சீமான் பேசியபோது அதை கீழே இருந்து எதிர்த்தவன் நான். கொள்கை இல்லாமல் பயணிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்துவிட்டேன் என்றார். பரப்புரைப் பயணம் சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள் தெரிவித்தார். இரவு உணவையும் தங்கும் இடத்தையும் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

**மூன்றாம் நாள்:** துவரங்குறிச்சி, உள்ளிக்கோட்டை, மன்னார்குடி ஆகிய பகுதிகளில் ஆக-8 அன்று பரப்புரை நடைபெற்றது. தோழர் பாரி, திருவேங்கடம் (தலைமைக் குழு உறுப்பினர்) ஆகியோர் தலைமை தாங்கினர்.

‘தடை அதை உடை’ கழகப் பரப்புரைப் பயணப் பாடல் மற்றும் தோழர்கள் வீரமணி, கிருஷ்ணனின் பகுத்தறிவு பாடல்களுடன் தொடங்கியது. மாரி, முகில்ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்), நிர்மல்குமார் (தலைமைக்குழு உறுப்பினர்), ஜாதியில் திருமணம் என்ற தலைப்பில் கலைச்செல்வன், திருப்பூர் முத்து, நிறைவாக கோபி வேலுச்சாமி, சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் குணா ஏன் இந்த பரப்புரைப் பயணம் என்பதைக் கேள்வி பதில் பாணியில் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

துவரங்குறிச்சியில் தோழர்கள் பேசும்போது இடையில் சங்கிகள் இந்து மதத்திற்கு எதிராக பேசுகிறார்கள் இந்து மதத்தை ஒழிக்கப் பார்க்கிறார்கள் என்று கூச்சலிட்டனர். சங்கிகளின் சலசலப்பை தாண்டி கூட்டம் நடைபெற்றது

மதிய உணவை கவிமணி ஏற்பாடு செய்திருந்தார். தோழர்கள் அனைவருக்கும் தங்கும் இடத்தையும் இரவு உணவையும் மறைந்த கொள்கையாளர் திமுக "மன்னை நாராயணசாமி" அவர்களின் பேரன் சோழராஜன்" ஏற்பாடு செய்தார்.

கடைவீதி வசூல் வழியாக ரூ. 8876 நிதி திரட்டினர். ரூ.590 ரூபாய்க்கு கழக வெளியீடுகள் விற்பனையானது. கடைவீதி வசூல் மற்றும் துண்டறிக்கை வழங்கும் பணியை செல்வராஜ் , மதுரை முருகேஷ் , கிருஷ்ணன் , கோபி வேலுச்சாமி, நல்லதம்பி, முகில்ராசு உள்ளிட்ட தோழர்கள் செய்தனர்.






# நீட்டை நீக்கு; போராட்டம் தீவிரம்!

Ban_NEET! மற்றும் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்று!, தமிழ்நாடு அரசு நீட்விலக்கு மசோதாவை நிறைவேற்று, தொடர் போராட்டத்துக்கு இடம் கொடு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து, நீட் எதிர்ப்பு கூட்டியக்கம் சார்பில் சென்னை கோயம்பேடு திருவள்ளுவர் இல்லத்தில், கடந்த 10 நாட்களாக காலவரையறையற்ற பட்டினிப் போராட்டத்தில் 4 தோழர்கள் ஈடுபட்டு வருகின்றனர். தோழர் ரவி 7 நாட்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு தற்போது மருத்துவமனையில் உள்ளார்.





பட்டினிப் போராட்டத்துக்கு, ஆக-2, அன்று தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பாக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, ஷர்மிளா, குடிஅரசு, குறளரசி, பரணி, தமிழ்க்குமரன் ஆகியோரும், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, வடசென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர் ந. தட்சிணாமூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வ. வேலு, தோழர்கள் கார்த்தி ராஜேந்திரன், ராஜன், இளைஞரணி சார்பில் அருண்(மாவட்ட அமைப்பாளர்), யாழினி, குமார், இளவரசன், பிரசாந்த் ஆகியோர் பங்கேற்று ஆதரவளித்தனர்.

பெரியார் இயக்கக் கொள்கைக்கு உண்ணாவிரதப் போராட்ட முறை முரண்பாடானதாக இருக்கும் நிலையில், போராட்ட இலக்குக்கும் நோக்கத்துக்கும் ஆதரவளிக்கப்பட்டது.

ஆக-2, மாலை 3 மணிக்கு, தமிழ்நாடு மாணவர் இளைஞர் கூட்டமைப்பின் (TYSF) ஆலோசனைக் கூட்டமும், பத்திரிகையாளர் சந்திப்பும், சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்றது. பல்வேறு மாணவர் இயக்கங்கள் பங்கேற்ற இந்நிகழ்வில், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, கழகத்தின் சார்பில் சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், தாமரை ஆகியோர் பங்கேற்றனர்.

ஜூலை-27, மாலை 4 மணிக்கு, சென்னை மந்தைவெளி செயின்ட் மேரிஸ் பாலம் அருகில், இராவணன் (மாவட்டத் துணைச் செயலாளர்) தலைமையில், நீட் தேர்வை தடைச் செய்யக்கோரி, கழகத் தோழர்கள் தோழமை இயக்கத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 13 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran